விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 241 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 31 வெள்ளிக்கிழமை (16.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஜனாதிபதித் தேர்தலில் 39 போட்டியாளர்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

2024 ஜனாதிபதித்தேர்தலில் மொத்தம் 39 வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை 09.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரையிலான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும்போது 39 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைக் கையளித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு ▷15

## மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர் எங்களால் மாத்திரமே அது முடியும்

### ஜே.வி.பி தலைவர் அநுர குமார



(கொழும்பு)

மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றத்தினை தேசிய மக்கள் சக்தியினால் மாத்திரமே ஏற்படுத்த முடியும் என அக் கட்சியின் தலைவர் அநுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களிற்கு மாற்றம் மிகவும் அவசியமாக தேவைப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர் தேசிய மக்கள் சக்தியினால் மாத்திரமே இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக் ▷15

## பொய்ப் பிரசாரங்களுக்குத் தடை

# தேர்தல் விதிமுறைகள் கடுமையாக அமுல்

### தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர்



*(கொழும்பு)*

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வாக்களிப்பு முடியும் வரை அனைத்துத் தேர்தல் விதிமுறைகளும் கடுமையாக அமுல்படுத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

*(16ஆம் பக்கம் பார்க்க)*

## 21ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகின்றது

(கொழும்பு)

ஓகஸ்ட் மாத இரண்டாம் அமர்வு வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வை 21ஆம் திகதி மாத்திரம் கூட்டுவதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் ▷15

## முல்லைத்தீவில் பெண்ணைத் தாக்கி சங்கிலி அபகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வண்ணாங்குளம் பகுதியில் இருந்து வைத்தியசாலைக்கு சென்ற பெண்ணை ▷15

## புலிகள் மீதான தடை நீடிப்பு

### கனேடிய அரசின் தீர்மானத்துக்கு இலங்கை அரசு வரவேற்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்களை சட்டவிரோத அமைப்புக்களாக தொடர்ந்து பேணும் கனடா அரசாங்கத்தின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் வரவேற்றுள்ளது.

சமீபத்திய மீளாய்வின்படி, விடுதலைப் புலிகளின் மீதமுள்ள உறுப்பினர்கள் சர்வதேச நிதி சேகரிப்பு மற்றும் கொள்முதல் வலையமைப்பைக் கொண் ▷16

## 'கோப்பிக் கடை போல' தேர்தல்கள் ஆணைக்குழு

### விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

வேட்புமனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளின்போது தேர்தல்கள் ஆணைக்குழு ஒழுக்கக் கட்டுப்பாட்டை பேணத் தவறிவிட்டதாகத் தேசிய ஜன ▷15

## வேட்பாளர்களுக்கான சின்னங்கள் வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களது சின்னங்கள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் சுயேட்சை வேட்பாள ▷15

## கீரிமலை கிருஸ்ணர் ஆலயத்துக்குச் செல்ல அனுமதி



(யாழ்ப்பாணம்)

கடந்த 30 வருட காலங்களாக உயர்பாதுகாப்பு வலயத்தினுள்ளே கடற்படையினரின் கட்டுப்பாட்டிலே காணப்பட்ட பழைமை வாய்ந்த கீரிமலை கிருஸ்ணர் ஆலயத்தின் வழிபாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட் ▷15

## காங்கேசன்துறை – நாகப்பட்டினம்

### பயணிகள் கப்பல் சேவை இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் சிவகங்கை பயணிகள் கப்பல் சேவை இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு நாகப்பட்டினத்தில் இருந்து சுமார் 40 பயணிகளுடன் புறப்படும் இக் கப்பலானது மதியம் 2 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மாநகரசபையின் சைவமய விவகாரக் குழுவால் நல்லூர் உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் - 32 இன் வெளியீட்டு விழாவும் விருது வழங்கும் நிகழ்வும் நேற்று நல்லை ஆதின மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். மாநகர சபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் மருத்துவர் ந.சரவணபவா அவர்களுக்கு யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## கட்டுநாயக்கவிலிருந்து புதிய பஸ் சேவை ஆரம்பம்

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை பிரதான புகையிரத நிலையம் மற்றும் மகும்புர பலவகை போக்குவரத்து நிலையம் வரை புதிய சொகுசு பஸ் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையம், விமான நிறுவனம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் தனியார் பஸ் நிறுவனம் இணைந்து இந்த பஸ் சேவையை ஆரம்பித்துள்ளது. (ம-7)

## வரப்பிரசாதங்களுக்காக கட்சி தாவுபவர்கள் எம்முடன் இல்லை - சஜித்

எம்முடன் உள்ளவர்கள் வரப்பிரசாதங்களுக்காகக் கட்சி தாவுபவர்கள் அல்ல என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள சகல பிரஜைகளும், எதிர்வரும் தேர்தலில் முடிவுகளை மேற்கொள்ளும்போது, நாடு வீழ்ந்துள்ள நிலைமையிலிருந்து மீட்கக் கூடிய ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு வாக்களிப்பார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எமது கூட்டணியுடன் உள்ளவர்கள் மதுபானசாலை உரிமங்கள், வரப்பிரசாதங்கள் மற்றும் பணத்திற்காகக் கட்சி தாவமாட்டார்கள்.

அவ்வாறு வருபவர்களை நாம் ஒருபோதும், ஏற்றுக் கொள்வதும் இல்லை, வைத்துக் கொள்வதும் இல்லை.

ஐக்கிய மக்கள் கூட்டணியாகிய நாம் நாட்டு மக்களின் நலனுக்காக மாத்திரமே செயலாற்றுகிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன், வேட்புமனுவைத் தாக்கல் செய்ய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முகத்துவாரம் விஸ்ணு ஆலயத்திற்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். (ம-7)

## சண்டிலிப்பாய் சரஸ்வதி அம்பாள் கோயிலின் வரலக்ஷ்மி விரதம்



(யாழ்ப்பாணம்)

வரலக்ஷ்மி விரதத்தினை முன்னிட்டு சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோயில் கும்ப அலங்காரமாக எழுந்தருளி காட்சி தரும் வரலக்ஷ்மி தேவி. (ம-7)

## கை கொடுத்தார் ரணில் கும்பிட்டார் சஜித்

தேர்தல்கள் ஆணைக்குழுவில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் பணி நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பகல் 11 மணியுடன் நிறைவடைந்தது.

அதன்பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் அமர்ந்திருந்த ஆசனத்தில் இருந்து எழும்பி பின்னால் சென்றார். அப்போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்துவதற்கு கையை நீட்டினார்.

எனினும், தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்திலேயே அமர்ந்திருந்த சஜித் பிரேமதாஸ கையை கொடுக்காது, கைகூப்பி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வணக்கம் செலுத்தினார். (ம-7)

## 73,373 சுற்றுலாப் பயணிகள் 11 நாட்களில் இலங்கை வருகை

(கொழும்பு)

நாட்டில் இவ்வருடத்தில் ஆகஸ்ட் மாதத்தின் முதல் 11 நாட்களில் 73,373 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 1,271,432 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 237,649 ஆகும்.

ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)


31ம் நாள் அழைப்பு

அன்புடையீர்!
கடந்த 17.07.2024 புதன்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் கணபதிப்பிள்ளை
கதிரவேலு



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 14.08.2024 புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 16.08.2024 இன்று வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
இங்ஙனம்: குடும்பத்தினர்



மணிவிழா நாயகனுக்கு
மனமார்ந்த வாழ்த்துக்கள்



16.08.2024 அகவை அறுபதில் கால்பதிக்கும்
பொன்னாலையூர்

திரு. பரமேஸ்வரன்
கயிலைநாதன்

அவர்களுக்கு நல்வாழ்த்துக்கள். மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தினூடாக கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணம் மற்றும் சங்கானை ஆகிய கிளைகளில் சிரேஸ்ட பிரதம பாதுகாப்பு அதிகாரியாகவும் தற்போது மேக்கன்ரைல் நிறுவன மனிதவள முகாமையாளர் மற்றும் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் பரிபாலன சபை உறுப்பினரும் சமய சமூக தொண்டருமாகிய இ.ப கயிலைநாதன் அவர்கள் 16.08.2024 இன்று மணிவிழா காண்கிறார். அவரை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

வாழ்த்துவோர்:- பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன்
(ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி, காரைநகர்)
மற்றும் நண்பர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேட்புமனுத்தாக்கல் நிறைவு

# சூடு பிடித்துள்ள தேர்தல் களம்

**(கொழும்பு)**

**2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று 9 மணிக்கு ஆரம்பமாகி 11 மணியுடன் நிறைவிற்கு வந்தது.**

இதன்போது விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு தேர்தல்கள் ஆணைக் குழுவின் அலுவலகத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது

இலங்கை வரலாற்றில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தலாக 2024ஆம் ஆண்டுக்கான தேர்தல் பதிவாகியுள்ளது.

அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் பொது வேட்பாளர் உட்பட மேலும் மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர ஜனாதிபதி தேர்தலுக்கான முதலாவது வேட்புமனுவை கையளித்தார்.

கட்டுப்பணம் செலுத்திய 40 பேரில் 39 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களின் வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்டதன் பின்னர் மூன்று ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-6)

## தேர்தல் தொடர்பில் 408 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 408 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஜனாதிபதி தேர்தல் குறித்து அறிவிக்கப்பட்ட தினம் முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் பதிவானவற்றில் வன்முறை சம்பவமொன்றும் தேர்தல் சட்டத்தை மீறிய 392 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து வேட்புமனுத் தாக்கல் செய்யும் நாள் வரையிலான காலப்பகுதிக்குள் பதிவாகும் தேர்தல் வன்முறைகளின் எண்ணிக்கையானது கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவிலேயே காணப்படுவதாகத் தேர்தல் கண் காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஒரு மில்லியன் வாக்காளர்கள் தகுதி தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

2024 வாக்காளர் பட்டியலின் பிரகாரம் முதன் முறையாக வாக்களிப்பதற்கு ஒரு மில்லியன்பேர் இம்முறை தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-6)

## 11 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 11 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துப்பொருட்கள் கையளிக்கப்பட்டது. உமந்தவ சர்வதேச பௌத்த கிராமத்தின் சார்பில் ஸ்ரீ சமந்தபத்ர மகா ஆராத் தேரரினால் குறித்த மருந்துப்பொருட்கள் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் யமுனானந்தா, கண்வைத்திய நிபுணர் மலரவன், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (நி-6-33)

## வாக்குச் சீட்டு அச்சிடும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடப்படும் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் எண்ணிக்கை முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் வாக்குச் சீட்டின் உயரம் சுமார் 27 அங்குலமாகக் காணப்படும் என தெரிவித்துள்ளார்.

ஒரே வாக்குச் சீட்டில் மேலிருந்து கீழாக வாக்காளரின் பெயர்களும் அவர்களின் இலட்சினைகளும் அச்சிடப்படமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் ஒரே வாக்குச்சீட்டாக அச்சிடுவதா அல்லது இரண்டு வாக்குச்சீட்டுக்களாக அச்சிடுவதா என்பது குறித்துத் தேர்தல் ஆணைக்குழு வழங்கும் அறிவுரைகளுக்கு அமைய வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப்படும் என கங்கா கல்பனி லியனகே தெரிவித்தார். (நி-6)

## மூன்று அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியின் கீழ்

### வெளியானது அதிவிசேட வர்த்தமானி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் மூன்று அமைச்சுப் பதவிகளைக் கொண்டு வந்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி சுற்றுலா மற்றும் காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் முன்னர் இந்த அமைச்சுப் பதவிகளை வகித்து வந்த நிலையில், அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் பறிக்கப்பட்டமையால் அமைச்சுப் பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டன.

இதன்படி, இந்த அமைச்சுப் பதவிகளை தனது பொறுப்பின் கீழ் கொண்டு வந்து ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (நி-6)

## விசர்நாய்க்கடி நோய் அதிகரிக்கும் மரணங்கள்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

விசர்நாய்க்கடி நோய் காரணமாக இந்த ஆண்டின் இதுவரையான காலம் வரை 11 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது.

விசர்நாய்க்கடி நோய் தொடர்பில் மக்களுக்கு தெளிவின்மை காரணமாகவே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளதாக அந்த பிரிவின் விசேட வைத்தியர் அத்துல லியனபத்திரண தெரிவித்துள்ளார்.

நாய் கடிக்கும் பட்சத்தில் உடனடியாக வைத்தியசாலைக்கு சமூகமளித்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் இதுவரையான காலம் வரை விசர்நாய்க்கடி நோய் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகம் என அவர் தெரிவித்துள்ளனர். (நி-6)

## டிப்பர்-ஆட்டோ மோதி விபத்து

### மூவர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

திவுலபிட்டிய - நீர்கொழும்பு வீதியில் துனகஹ நகரில் டிப்பர் ரக வாகனமும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த மூவர் உயிரிழந்துள்ளதாக திவுலபிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திவுலப்பிட்டியவில் இருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த லொறி ஒன்று கொதிகமுவ பகுதியில் இருந்து துனகஹா நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முச்சக்கரவண்டியில் பயணித்த மூவர் உயிரிழந்துள்ளதாக திவுலபிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர். மற்றொரு பெண் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


முச்சக்கரவண்டி சாரதியின் கவனக்குறைவே விபத்துக்கு காரணம் என திவுலபிட்டிய பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ஒலிம்பிக்கில் மீண்டும் கிரிக்கெட்



2028 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல் ஸில் நடைபெறவுள்ள அடுத்த ஒலிம்பிக்கில் 128 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கிரிக்கெட் இடம்பெறவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1896 ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் பட்டியலிடப்பட்ட விளையாட்டுகளில் ஒன்றாக கிரிக்கெட் இடம்பெற்றது. ஆனால் குறைந்த எண்ணிக்கையிலான அணிகள் பங்கேற்றதன் காரணமாக அதைத் தொடர முடியவில்லை என குறித்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

1900 ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஒலிம்பிக்போட்டியில் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையே முதல் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணி 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற இங்கிலாந்து அணிக்கு வெள்ளிப் பதக்கமும், பிரான்ஸ் அணிக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டதுடன், அந்தப் பதக்கங்கள் பின்னர் தங்கம் மற்றும் வெள்ளியாக மாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதன்பிறகு ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்க்கப்படவில்லை.

இப்போது 128 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ள செய்தி வெளியாகியுள்ளமையால் ரசிகர்களிடையே சந்தோசத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 160 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 200-250 | 300 |
| தக்காளி | 300 | 300 | 250 | 270 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 120-140 | 200 |
| கோவா | 350 | 300 | 200 | 350 |
| கரட், | 350 | 380 | 250 | 350 |
| பூசணி | 150 | 140 | 130 | 120 |
| புடோல் | 140 | 150 | 140 | 160 |
| வாழைக்காய் | 300 | 250 | 200-250 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 250-400 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 220 | 250 | 230 | 250 |
| பாகற்காய் | 300 | 400 | 250-300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 120 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 220 | 200 | 200-250 | 280 |
| லீக்ஸ் | 300 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 380 | 300 | 250 | 250 |
| கறிமிளகாய் | 800 | 700 | 350 | 600 |
| முருங்கைக்காய் | 140 | 180 | 60-80 | 150 |
| போஞ்சி | 700 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 650 | 500 | 350-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 60-100 | 60-100 | 80-130 |
| இராசவள்ளி | 800 | 650 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 250 | 250 | -- | 350 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 90 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 70 | 50 | 80 | 80 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3197

**சரண்**

மனைவி வாங்கி வர சொல்லுற பொருளும்... நன்கு மனப்பாடம் செய்த கேள்வியும்....



நிச்சயம் மறந்து போகும்

**விதுஷா**

நாம எப்படி இருந்தாலும் கொஞ்சம் கூட கொறச்சி எடை போடாத ஒரே இடம்



வெயிட் மெஷின்...

**மனோஜ்**

எல்லா பெண்களும் ஏதோ ஒரு தருணத்தில் டீச்சராக கனவு காண்கிறார்கள்...



முடியாத பட்சத்தில் கணவனுக்கு மட்டும் டீச்சராகிவிடுகிறார்கள்...

**சரோன்**

ஏன்டா
good morning
good night
hello, சாப்பிட்டிங்களா
என்ன செய்றீங்க
இந்த வார்த்தை மட்டும் இல்லன்னா...



messenger கண்டுபிடிச்சது
வேஸ்ட்டா போயிருக்கும் தானடா

**காவியா**




**அர்ஷா**


ஜலதோஷம் வந்தா
நம்ம கூட
ஒரு வாரம் தங்குது



இந்த சந்தோஷம்
மட்டும் வந்தா
உடனே போயிடுது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களக்கற்கையும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும்

ஞானமணி
இரட்ணசிங்கம்
ஆசிரிய கல்வியியலாளர்

05

அதிகாலை ஐந்துமணி, அமைதிக்கற்கை (silent study) என்ற வகையில் மாணவர்கள் கற்கை மண்டபத்தில் (study hall) சீருடையுடன் இணைந்திருக்கின்றார்கள். தேநீர் அவர்களின் மேசைகளுக்கு வருகின்றது. ஒருமணி நேரம் நேற்றையதினம் தாங்கள் பயன்படுத்திய மூன்று செயலட்டைகளிலும் பூரணப்படுத்தப்படாமல் இருக்கின்ற அனைத்து விடயங்களையும் பூரணப்படுத்துகின்ற வேலையில் மிக அமைதியாக செயற்படுகின்றனர்.

'சேர் நாம் காலை ஐந்து மணிக்கு இங்கு வருவதற்கு பல இடையூகள் உண்டு. கடந்த இரவு, முதன்முதல் அம்மாவை விட்டுத் தனியப்படுத்துத் தூக்கமே வரவில்லை.'

'நண்பர்களுடன் சென்ற இரவு கதை கதையென்று கதைத்து கடைசியில் அதிபர் வந்துபேசிய பின்தான் அதுவும் குசுகுசு வென்று கதைத்துக் கொண்டுதான் தூங்கினோம்.'

'சிலர் லையிற்றைப் போட்டு விட்டு எழுதிக்கொண்டிருந்தால் எப்பிடிப் படுக்கிறது'

இவை அவர்கள் சார்பான நெருக்கீடுகள்.

'இவ்வளவு பேருக்கு கொஞ்ச நேரத்தில் வருவதற்கு கழிப்பறை வசதி பத்தாது சேர்'

'கனபேர் கனநேரம் குளிக்கினம், குளியலறை போதாது சேர்'

'கொஞ்ச நேரத்தில குளிக்க தண்ணி முடிஞ்சுது சேர்'

இவை எமது நிறுவனம் சார் இடர்பாடுகள்.

அவர்களைக் கதைக்கவிட்டு அவர்களின் வெளிப்படுத்துகைகளை கேட்டலும் ஒருவகை வகுப்பறை முகாமைத்துவம் தான். நாம் தீர்வு தருகின்றோமோ இல்லையோ அவர்களது இடர்பாடுகளைக் கேட்டால் அவர்களது மனம் ஆறுதலடைந்து விடுகின்றது.

ஆறு மணிமுதல் ஏழரை மணி வரை மின்காந்தவியல் (Electro magnetism) ஆரம்பித்தது. காந்தங்கள், மினைகாந்தங்கள், மோட்டர்கள், மாதிரிகள், மின்கலங்கள், ஒலிபெருக்கி, கடத்திக் கம்பிகள், மின்மாற்றிகள், டைனமோக்கள் என்பவற்றினைக் கொண்ட அட்டைப் பெட்டி ஒவ்வொன்று ஒவ்வொரு குழுவுக்கும் முன்பாக வைக்கப்படுகின்றது.

காந்தவகைகளில் ஆரம்பித்து காந்தப்புலம், மின்காந்தம், அம்பியர் விதி, காந்தப்புலத்தில் உள்ள மின்பாயும் கடத்தியில் செயற்படும் விசையும் அதன் இயங்கும் திசையும், செப்புச் சுருளில் உருவாக்கப்படும் மின்காந்தத் தினை கூட்டும் குறைக்கும் முறைகள், பிளமிங்கின் இடக்கைவிதி, எளிய மோட்டர்களை ஆக்குதல், காந்தப்புலத்தில் உள்ள இயங்கும் கடத்தியில் செயற்படும் மின்னோட்டமும் அதன் திசையும், பிளமிங்கின் வலக்கை விதி, இவற்றை எல்லாம் செவ்வை பார்த்தல், மின்மாற்றிகள் (Transformer) படிகூட்டுதல், படிகுறைத்தல் இவை அனைத்தும் பதினாறு பக்க செயலட்டையுடன் செய்யப்படுகின்றன.

'என்னடா கலைத்திட்டத்தினை ஒப்புவிக்கின்றான்' என எண்ணுகின்றீர்களா? அனைத்து மாணவர்களும் இயங்குநிலை உபகரணங்களை தாம் தொட்டுணர்ந்து செயற்பட்டுக் கற்கையில் ஈடுபட்டுக்கொண்டனர். கற்றலின் களைப்பினை உணராமல் கற்றல் நடைபெறுகின்றது.

சிறிய இடைவேளை, அதனைக் காலைப் பறவைகளை பைனாகுலர் ஊடாகப் பார்த்து மனதினை மகிழ்வாக்கிக் கொள்கின்றனர். காலை உணவிற்கான அழைப்பு விடப்பட்டதும் மாணவர்கள் சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்ட அறையை நோக்கி வேகமாக நகர்ந்தனர்.

'இடியப்பமும், சம்பலும், சாம்பாறும் அநேகமான மாணவர்களுக்கு நாவிற்கு சுவையாக இருந்தமை அவர்கள் சாப்பிடுவதனை ரசிக்கும் முறையில் அனுமானிக்க முடிகின்றது.'

(ஆரம்ப நாட்களில் பாணும் பருப்பும் அல்லது குழம்பும் மட்டும் தான் காலையில் உணவாக வழங்கி வரப்பட்டது. மாணவர் வரவேற்புக் குறைவாக இருப்பதனை அவதானித்த நிர்வாகம் செலவினை கருதாமல் உணவு வகைகளை கலந்து வழங்க அனுமதி வழங்கி இருந்தது.)


உணவின் பின் கிடைத்த பதினைந்து நிமிடங்களையும் பிள்ளைகள் நிகழ்வுகள் அனைத்தினையும் வளவாளர்களையும் இட அமைவு மற்றும் ஏனைய பிள்ளைகள், அவர்களின் செயற்பாடுகள் பற்றிய விமர்சனங்களைப் பகிருவதில் (gossiping) செலவழித்தனர். சிலர் வளவாளர்களுக்குப் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

'இது ஓர் செலவில்லாத பிரதிபலிப்புக் கற்றற்செயற்பாடு (Reflective Learning) என்பது வளவாளர்களுக்குத் தெரியும்'

பல்லூடக அறையில் பல்லூடக எறிகையின் மூலம் (Multi media Room - PowerPoint Presentation) இதுவரை கற்ற மின்காந்தம் பற்றிய விவரங்கள் படங்களின் உதவியுடன் மீளவலியுறுத்தல் செய்யப்படுகின்றன. படங்கள், வீடியோ ஞானிகளின் கதைகளும் படங்களும், யதார்த்த நிலைமைகளும் வலிமையான புலக்காட்சியினை (Perception) ஏற்படுத்தும் என்பது தெளிவாகின்றது.

இடையிடையே மதிப்பீட்டு வினாக்கள் (Evaluation) மாணவர்களின் நிலையை அவர்களுக்கு உணர்த்தி நிற்பதுடன் மீளப்பெறுகை (Power of Recalling) வலிமையையும் தேவையையும் தாம் உணரப் பண்ணுகின்றன.

எத்தனை உளவியலாளர்களின் கொள்கைகளைக் கற்றுணர்ந்து செயற்பட்டாலும் எத்தனை கல்வியியலாளர்களின் தத்துவங்களைப் புரிந்துகொண்டு இயங்கினாலும் மாணவர் தனியாள் வேறுபாடுகள் (individual differences) கற்றற் பாங்குகள் (Learning styles) என்பன செலுத்தும் செல்வாக்குகளைப் புரிந்துகொண்டு தற்துணிவுடன், தருணத்திற்கு ஏற்ற முகாமைத்துவத்துடன் (situational management) வகுப்பறையை முகாமை (Classroom management) செய்பவரால் மட்டுமே வெற்றிகரமான கற்றல்- கற்பித்தற் செயற்பாட்டினை நடைமுறைப் படுத்த முடியும்.



தனியொரு வளவாளரினால் பல்தரக்கற்பித்தலுடன் ( multi grade teaching) செயன்முறைக் கற்றலை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியாது.

இங்கு பல நிலைகளில் உள்ள பன்மைத்திறமையுள்ள வளவாளர்களின் - ஆசிரியர்கள், பட்டதாரிகள், பட்டக்கல்வியில் உள்ளோர் உயர்தரம் கற்போர் எனப் பல வகைப்பட்ட இணைந்த செயற்பாடு விளைதிறன் (Effective) மிக்கதான களத்தை ஏற்படுத்துவதில் பங்களிப்புச் செய்கிறது.

பிள்ளைகள் ஒரே குழுவாக அமர்ந்து வீட்டு மின்சுற்று என்னும் அலகின் பிரயோக நிலைச் செயற்பாடுகளுக்காக இணைகின்றனர். ஒரு வீட்டிற்கு உரிய குதைகளையும் மின் குமிழ்களையும் சுற்றில் இணைப்பதற்கு வேண்டிய அனைத்து உபகரணங்களும் (angle holder, straight holder, sun box, bulbs, plug points, gang switches, blue wire and red wires. adopters, sockets) என்பவற்றுடன் அவற்றிற்கான ஆயுதங்கள் (குறடு, மூக்குக் குறடு, tester, கடத்திவெட்டி போன்றன) அனைத்தும் வழங்கப்படுகின்றன.

இதில் மிகவும் பிரதான அம்சம் மாணவர்களில் ஆறு, ஏழு பேர் வரை வீடுகளில் வயரிங் (Wiring) வேலைகளில் ஈடுபட்டவர்கள். அவர்களும் வளவாளர்களுடன் இணைந்து செயற்பட வலிமையான சகபாடிக் கற்கை இலகுவாக கற்றற் சூழலை அமைக்கின்றது.

நிறைவில் தேநீர் இடைவேளை. பால் தேநீருடன் பணிஸ் வழங்கப்படுகின்றது.

மீண்டும் நண்பர்களுடன் இணைந்து அளவளாவல்.

இரசாயன ஆய்வுகூடம் பிள்ளைகளை வரவேற்கின்றது. செய்து காட்டல் முறையில் ( Demonstration method) வாயுக்கள் தயாரித்தல் ( ஐதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட்) இரசாயனத்தாக்க வகைகள். தாக்க வீதம், மின்பகுப்பு, மின்கலங்கள் எனப் பல்வகைப்பட்ட செயற்பாடுகளுடன் மதிய உணவு மீள வலியுறுத்தல், மதிப்பீடு என்பவற்றுடன் தரம் பதினொன்று மாணவர்களின் செயலமர்வுகள் நிறைவுக்கு வருகின்றன.

ஒரு இரண்டு நாட் பயிற்சி பயிலமர்வு இது. அதனைப்போல் நான்கு நாட்கள் கொண்ட உயர்தர வகுப்புச் செயன்முறை, ஒருதினத் திற்குரிய ஒன்பதாம் வகுப்புச் செயன்முறை,தரம் ஐந்திற்குரிய சுற்றாடல் சார் செயற்பாடுகள் கடந்த மூன்று ஆண்டுகளாக வாராந்தம் குறைந்தது ஒன்றாவது நடைபெற்று வருகின்றது. முன்னர் கணிதப் பயிலமர்வுகள், சிங்கராஜ வனத்தினைப் பார்வையிடும் கல்விச்சுற்றுலாக்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பல வகைகளில் இடம் பெற்றதுண்டு. அவைபற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் காண்போம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)
நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க் காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள வயலினிசை நிகழ்வில் வயலின்- யோ.பானுஜா, சோ.திலக்ஷன், ப.கவிப்பிரியன், திருமகள், மிருதங்கம்-சு.யசோதரன், கீபோட்- க.ராகவேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 7.15-8.05 மணிவரை இடம்பெறவுள்ள இன்னிசை அரங்கில் பாட்டு-என். ஞானச் செல்வம், ஹார்மோனியம்-என். செல்வச்சந்திரன், மிருதங்கம்-க.சிவகுமார் மற்றும் தபேலா-ம.பிரபா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# யாழ்.இந்திய துணைத்தூதரக வளாகத்தில் சுதந்திர தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)
இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை காலை யாழில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தில் இடம் பெற்றது. இதன் போது யாழிற் கான இந்திய துணைத் தூது வர் சாய்முரளி அணி வகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டு இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் உரையை துணைத் தூதுவர் சாய்முரளி வாசித்திருந்தார். இந்நிகழ்வில் துணைத் தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் கடத்தல்

## ❖ ஒருவர் கைது
## ❖ டிப்பர் பறிமுதல்

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை புத்தூர் சந்தியை அண்மித்த பகுதியில் போலியான அனுமதிப் பத்திரத்துடன் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை நேற்று முன்தினம் சாவகச் சேரிப் பொலிஸார் கைப் பற்றியுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள் ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் தலைமையில் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து யாழ். நோக்கிச் சென்ற டிப்பர் வாகனத்தை வழி மறித்து சோதனையிட்ட வேளை குறித்த கைது நட வடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

கைதான சந்தேகநபரை சாவகச்சேரி நீதவான் நீதி மன்றத்தில் முற்படுத்திய நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ள னர். (நி-6-30)

# செஞ்சோலை நினைவேந்தல் பல்கலையில் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)
செஞ்சோலை படுகொலை யின் 18 ஆம் ஆண்டு நினை வேந்தல் யாழ்ப்பாண பல்க லைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் பல் கலைக்கழக பிரதான வளாகத்தில் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட் டது. (நி-6-33)


# ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம்- 2024 தற்காலிக கடை இட ஒதுக்கீடு

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 02.09.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ஆலயத்தின் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடைகள் தொகுதி வாரியாக பின்வரும் வகையில் அமையும்.

1.ஐஸ்கிறீம் கடை 2.இனிப்புவகை
3.தேநீர்க்கடை 4. மணிக்கடை
5. கச்சான் கடை

• முக்கிய குறிப்பு

முதல் மூன்று கடைத் தொகுதிகளுக்குமான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய கூறுவிலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும். அக்கறை உடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கீட்டைப் பெற்று தொடர்பான வாடகைப் பணத்தை முழுமையாக செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். விபரங்கள் வழங்க வேண்டிய படிவங்களை கோவிலிலுள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலம் கோரும் நாள் 21/08/2024 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி

பெறுநர்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
(சி-990)

துன்னாலை வடக்கு, புலோலி.
தொ.இல- 021 226 3074
தொலை.இல- 021 205 6644


# மந்திரி மனை புனரமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
யாழ். பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோவிலை அண்மித்து அமைந்துள்ள மந்திரி மனையை புன ரமைப்பது தொடர்பான கலந்துரையா டல் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிலையில் ஆளுநர் தலை மையில் நடைபெற்ற விசேட கலந்து ரையாடலின் போது சில விதிமுறைக ளுக்கு உட்பட்டு மந்திரிமனையை புனரமைத்து பாதுகாப்பதற்கு மடம் அறக்கட்டளை பொறுப்பாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள், யாழ் மாநகர சபை ஆணையாளர், உள்ளூ ராட்சி திணைக்கள அதிகாரிகள், தொல் பொருள் திணைக்கள அதி காரிகள், மடம் அறக்கட்டளையின் பொறுப்பாளர் உள் ளிட்டோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் திட்ட முன்மொழிவிற்கு அமைய, திணைக்கள மேற்பார்வையுடன், அறக்கட்டளையின் நிதியில் மந்திரி மனையை புனரமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டிற்கு அமைய தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய நட வடிக்கைகளை முன்னெடுப்பதற்கான கோரிக்கை கடிதம், யாழ்ப்பாணம் - கிளி நொச்சி பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தினூடாக அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. (நி-6-33)


# விக்னேஸ்வர வித்தியாலய பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)
புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்ட பத்தில் இடம்பெறும்.

வித்தியாலய முதல்வர். க.துஸ்யந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன் (பழைய மாணவர்), சிறப்பு விருந்தி னராக யாழ்.வலயக்கல்வி அலுவலக அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன் மற்றும் கௌரவ விருந்தினராக இ.தயாபரன் (பழைய மாணவர்-ஜேர்மனி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரதின விழாவில் பங்கேற்ற ராகுல் காந்தி



(டில்லி)

டில்லி செங்கோட்டையில் இன்று நடந்த சுதந்திர தின விழாவில் எதிர்க்கட்சித் தலைவரான ராகுல்காந்தி பங்கேற்றார்.

10 ஆண்டுகளுக்கு பிறகு சுதந்திரதின விழாவில் கலந்து கொண்ட முதல் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி ஆவார்.

2014 முதல் 2024 வரை எதிர்க்கட்சி தலைவர் பதவியை யாரும் வகிக்கவில்லை. ஏனென்றால் எதிர்க்கட்சிகள் யாருக்கும் தேவையான அளவு எம்.பி.க்கள் இல்லை.

சமீபத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் அதிக இடங்களில் வெற்றி பெற்று எம்.பி.களின் எண்ணிக்கையை உயர்த்தியது. இதனால் ராகுல் காந்தி கடந்த ஜூன் 25 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவராக தேர்வுபெற்றார். (நி-6)

# வயசு சிறுசு; மனசு பெருசு
## சிறுவன் செய்த நெகிழ்ச்சி செயல்



(கேரளா)

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த கேத்து நாயக்கன்பட்டி கிராமத்தில் இலங்கை தமிழர்களுக்கு கட்டப்பட்டு வரும் வீடுகளை, அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு மேற்கொண்டார்.

அவருடன் ஆட்சியர் சராயு மற்றும் அரசு அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், கொட்டுகாரண்பட்டி கிராமத்தைச் சேர்ந்த செந்துரபாண்டி என்பவரது நான்கு வயது மகன் பிடல் காஸ்ட்ரோ, தான் சேர்த்து வைத்திருந்த உண்டியல் பணம் 10 ஆயிரம் ரூபாயை வயநாடு பேரிடர் நிதிக்காக அமைச்சரிடம் வழங்கினார்.

பணத்தை வழங்கிய சிறுவனை அமைச்சரும், ஆட்சியரும் பாராட்டினர். (நி-6)

# செங்கோட்டையில் தேசியக்கொடி ஏற்றினார் பிரதமர் மோடி

## கோலாகலமாக நடைபெற்ற இந்தியாவின் சுதந்திரதினக் கொண்டாட்டம்

(டில்லி)

**இந்தியாவின் 78 ஆவது சுதந்திரதின விழா நாடு முழுவதும் நேற்றுக் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.**







செங்கோட்டையில் பிரதமர் மோடி மூவர்ண தேசியக் கொடியேற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இது அவரது 11 ஆவது சுதந்திர தின உரையாகும்.

டில்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திலும் பிரதமர்மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார். (நி-6)

# வன்கொடுமையின் பின் கொலை செய்யப்பட்ட மருத்துவர்
## எதிர்ப்புத் தெரிவித்து கொல்கத்தாவில் ஆர்ப்பாட்டம்



(டில்லி)

கொல்கத்தா அரச மருத்துவமனையில் பெண் மருத்துவர் வன் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கான பெண்கள் நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்ட போராட்டங்களை முன்னெடுத்தனர்.



பெண் மருத்துவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து கடந்த ஒரு வாரகாலமாக கொல்கத்தாவில் ஆர்ப்பாட்ட பேரணிகள் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிரட்டும் குரங்கம்மை உலகநாடுகளே உஷார்!

## அவசர நிலையை அறிவித்தது உலக சுகாதார அமைப்பு

(ஜெனீவா)

**நடப்பு ஆண்டில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் என 13 நாடுகளில் குரங்கம்மை கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**



ஆபிரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பில், குரங்கம்மை காய்ச்சல் பொதுச் சுகாதார அவசரகால நிலையாக உருவாகி உள்ளது.

500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர். இதனால், இதனை தடுத்து நிறுத்த சர்வதேச உதவி வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது.

இதன்படி, நடப்பு ஆண்டில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் என 13 நாடுகளில் குரங்கம்மை கண்டறியப்பட்டு உள்ளது.

இவற்றில் கொங்கோ நாட்டில் 96 சதவீதம் அளவுக்கு பாதிப்புகளும் மற்றும் மரணங்களும் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆபிரிக்க நாடுகளில் புது வடிவிலான வைரஸானது பரவி வருகிறது.

கொங்கோவில் இருந்து புருண்டி, கென்யா, ருவாண்டா மற்றும் உகாண்டா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளது.


இதுபற்றி உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கப்ரியேசல், நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விடயம்.

இந்த வைரஸானது ஆபிரிக்காவைக் கடந்து பரவக்கூடிய ஆற்றல் படைத்துள்ளது என்பது அதிக வருத்தத்திற்குரியது என தெரிவித்தார்.

இந்தச் சூழலில் உலக சுகாதார அமைப்பு, குரங்கம்மையை சர்வதேச சுகாதார அவசரகால நிலையாக அறிவித்துள்ளது. (நி-6)

## பாகிஸ்தானில் தேசியக்கொடி விற்பனை நிலையத்தில் தாக்குதல்

### மூவர் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தேசியக் கொடி விற்பனை செய்த வணிக நிலையத்தில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் மூவர் பலியாகியுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாகிஸ்தானில் 77 ஆவது சுதந்திரதினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட நிலையில் பலூசிஸ்தானின் குயூடா பகுதியில் உள்ள கடை ஒன்றில் பாகிஸ்தான் தேசியக்கொடி விற்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் பாகிஸ்தான் தேசியக்கொடியை விற்பனை செய்ய வேண்டாம் என பலூசிஸ்தான் விடுதலை இராணுவம் என்ற கிளர்ச்சிக்குழு எச்சரிக்கை விடுத்திருந்தது.

குறித்த எச்சரிக்கையை மீறி தேசியக் கொடி விற்பனை செய்த கடைமீது கையெறி குண்டு வீசித்தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததாகவும், இந்தத் தாக்குதலுக்கு பலூசிஸ்தான் விடுதலை இராணுவம் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்தால் ஊடுருவலை நிறுத்துவோம்

### நிபந்தனை விதித்தது உக்ரைன்

(கீவ்)

போர் அமைதிக்கு ரஷ்யா சம்மதம் தெரிவித்தால் ஊடுருவலை நிறுத்துவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.



உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் தொடர்ந்து கொண்டிருக்கையில் அண்மையில் ரஷ்யாவிற்குள் உக்ரைன் படைகள் ஊடுருவியது.

உக்ரைனிய படைகளின் இந்த ஊடுருவல் காரணமாக கிட்டத்தட்ட 120000 இற்கும் மேற்பட்ட மக்கள் குர்ஸ்க் பிராந்தியத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும் குறித்த பகுதியில் அவசர நிலையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு ரஷ்ய நிலப்பரப்பிற்குள் நடந்த மிகப்பெரிய ஊடுருவலாக இது பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்யா போர் அமைதிக்கு ஒப்புக் கொண்டால் ரஷ்யாவில் உக்ரைனிய படைகள் கைப் பற்றிய பகுதிகளை கைவிட தயாராக இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்த தகவலில், போர் அமைதிக்கு ரஷ்யா எவ்வளவு விரைவாக சம்மதம் தெரிவிக்கிறதோ, அவ்வளவு விரைவாக ரஷ்யாவிற்குள் உக்ரைனிய பாதுகாப்பு படைகளின் தாக்குதல் நிறுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

எனினும், ரஷ்யாவுக்குள் ஊடுருவி வரும் உக்ரைனிய படைகளுக்கு எதிராக தீவிர எதிர்ப்புத் தாக்குதல்களை ரஷ்யப் படைகள் மேற்கொண்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில், குர்ஸ்க் பிராந்தியத்தில் ஊடுருவியுள்ள உக்ரைனிய வீரர்களுக்கும் ரஷ்ய படைகளுக்கும் இடையில் நடந்து வரும் சண்டையில் இதுவரை 420 உக்ரைனிய வீரர்கள் கொல்லப்பட்டு இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இதேவேளை, குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் படைகளால் ஏவப்பட்ட 4 ஏவுகணைகளை ரஷ்யா தாக்கி அழித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிருங் கழல் பணிந்து முதிரும் கலை படைத்தவர் அமரர் க.கதிரவேலு

**அவரின் 31ஆம் நினைவு நாள் இன்றாகும்**



ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம் மையின் அருட்கடாட்சமதில் திளைத்தவர் அமரர்.கணபதிப் பிள்ளை கதிரவேலு என்ற நாமமதைப் பேறாக்கிய பெருங்கலைஞர்.

சிறுவயதில் இருந்து சித்திரம், ஓவியம், சங்கீதம், சிற்பம்,புத்தாக்கம், கவிதை, விளையாட்டு, யோகம், தியானம், விவசாயம் ஆகிய பல்துறைகளிலும் பரீட்சையமாகி ஒரு பரிபூரண ஆளுமைக்குச் சொந்தக்காரராகி ஊரும் பேரும் உலகும் போற்ற வாழ்ந்த அதிசயமான கலைஞனே அமரர் கதிரவேலு ஆவார்.

## மறைந்தார் மாண்பு

1974-1975 காலப்பகுதியில் நானும் அண்ணன் கதிரவேலும் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் ஒன்றாகவே பயிற்சி பெற்றோம். ஆசிரியபயிற்சியைத் தவமாக்கிய பலசாலியே இவராவார். கல்வியியல், உளவியல், நுண்கலைகள், ஆங்கிலம், தமிழிலக்கியம், விவசாயம், புத்தாக்கம், கீழைத்தேய, மேலைத்தேய கலைகள், சமயம், உடற்பயிற்சி, சுகாதாரம், கற்பித்தல் நுணுக்கங்கள் என அத்தனை பாடங்களிலும் ஆளுமை கொண்ட அரங்கக்கலைஞன் இவராவார்.

பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் ஒரு குடும்ப அங்கத்தவர்களாக இரண்டு வருடங்கள் வாழ்ந்த ஆனந்த வாழ்வு, இன, மத, மொழிகளுக் கப்பால் இஸ்லாமிய கிறிஸ்தவ சகோதர வாஞ்சையை கலாசாலை உருவாக்கியது.

ஆமாம் ஏராளமான சித்திர ஓவிய சிற்ப கலைப் படைப்புக்கள் அன்றைய பொழுதிலே இவரால் உருவாக்கம் செய்து கொழும்புக்கு அனுப்பப்பட்டது. அதிக தெரிவுகளால் இவரது புகழானது பெரும்பான்மை இனத்தவரால் அங்கீகரிக்கப்பட்டது.

இவரது வீட்டிலும் ஏராளமான அழகு ஒழுகும் சிலைகள் வடிக்கப்பட்டவுடன் சம்பந்தப்பட்டவர்களால் மகிழ்வோடு சொந்தமாக்கப்பட்டு விமர்சனமாக்கப்படுகின்ற பெரும் பேற்றுக்கு அமரர் பொறுப்பானார்.

தற்போதும் ஏராளமான சிலைகள் பொற்புடன் உயிரோடு தவமிருக்கின்றன. மேலும் சரஸ்வதி, பிள்ளையார், லட்சுமி, ஆஞ்சநேயர், கண்ணபிரான், தனிப்பட்ட பிரமுகர்கள், யேசுநாதர், புத்த பகவான், இளநகைக் கன்னியவள், கடல்படுநெடுமீன், கைக் குழந்தைக் காரிகையாள், ஆதியாம் இவை போன்ற சிலைகள் பேசும் சிற்பங்களாக உயிர்பெறுகின்றன. எங்கே என்றால் இவரது வீட்டிலே! அல்லாமலும் பாடசாலைகள், வாசிகசாலைகள், உயர்கல்வி நிறுவனங்களில் பெரியார்களின் உயர் சிற்பக்கலைகளைப் படைத்து பேறும், புகழும் பேரின்பமும் பெற்று வீறுநடை போட்டு வாழ்ந்துள்ளார். அத்துடன் இவரது மனைவி, மக்கள், பேரர்களோடு மருமக்களும் அவரது பெரும் பேற்றுக்குச் சொந்தம் கொண்டாடி சேவையும் புரிந்துள்ளனர். மொத்தத்தில் இவரது பிள்ளைகள் கொடுத்து வைத்தவர்களாவார்கள்.

வலம்புரி நாளிதழுக்கான முத்திரைச் சின்ன அடையாளத்தை மிகவும் பேருள்ளதாக வரைந்து அந் நாளிதழ் நீடு வாழவே, நிமிர்ந்து நிற்கச் செய்த பீடுடைய பிரானாக காவிய, ஓவிய நாயக அமரர் கதிரவேலு கடவுளாகின்றார். அவருக்கான இரங்கலையும், அஞ்சலியையும் வலம்புரி உரிமையோடு செலுத்தியிருந்தமை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஒரு மாபெருங் கலைஞனாக இந்தப் பூமியுள்ள வரை நீடுயர்ந்து வரலாற்றில் இடம்பெற அவரால் படைக்கப் பெற்ற எஞ்சியிருக்கும் சிலைகளை ஓரிடத்தில் காட்சிப்படுத்த ஆவணபுரிதல் வேண்டும்.

இதனை அவரது குடும்பத்தினர் செய்து ஒப்பேற்ற இருப்பது அவரது ஆத்மா ஈடேற்றத்திற்கு வழி சமைக்கும்.

**கே.எஸ்.சிவஞானராஜா**

# இன்று ஒரு தகவல் 212



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## கொடுத்ததை வாங்கக்கூடாது

புதுக்கோட்டைக்குப் பக்கத்திலே மிதிலைப்பட்டி என்று ஒரு ஊர். அங்கே அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்று ஒருவர் இருந்தார்.ஒரு நாள் அவர் அதிக தூரத்திற்கு அப்பால் உள்ள இன்னொரு ஊருக்கு ஒரு கல்யாணத்திற்காக போயிருந்தார்.

கல்யாணம் முடிந்தது. திரும்பவும் ஊருக்கு வர வேண்டும். அப்போது எல்லாம் பேருந்து வசதி ஏது? வண்டியிலே தான் வரவேண்டும்.

ஒரு இரவு ஆகும் வந்து சேர்வதற்கு. ஒரு வண்டியை வாடகைக்கு பிடித்தார். வண்டிக்காரனைப் பார்த்து என்னப்பா கேட்கின்றாய் என்றார்.

மூன்று ரூபாய் வாடகை கொடுங்கள். ஊருக்கு போய் சேர்வதற்குள் விடிந்து விடும் அதனால் சாப்பாடு போட்டு அனுப்புங்கள். அது போதும் என்றார்.

சரி என்று ஒத்துக்கொண்டார்.இரவிலே வண்டி புறப்பட்டது.கவிராயர் அதிலே நன்றாக காலை நீட்டிப் படுத்துக் கொண்டார். நல்ல நிலா வெளிச்சம். வண்டிக்காரர் நல்ல ஆனந்தமாக தெம்மாங்கு பாடிக்கொண்டே போனார்.

கவிராயரும் மிகவும் சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டே போகின்றார். வண்டி போய்க் கொண்டிருந்தது. வண்டிக்காரன் பாட்டை நிறுத்தி விட்டு மெதுவாக கவிராயரிடம் பேச்சுக் கொடுத்தான்.

ஏங்க? நீங்கள் யார்? உங்களைப்பற்றி கொஞ்சம் சொன்னால் நானும் கேட்டுக் கொண்டே வருவேனே என்றார்.

கவிராயரும் தன்னுடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

நான் இருக்கின்றது மிதிலைப்பட்டி தான். எங்கள் முன்னோர்கள் எல்லாம் பெரிய வித்துவான்கள். நிறைய நூல்கள் எல்லாம் கூட எழுதியிருக்கின்றார்கள். ஆரம்பத்திலே சேலத்திற்குப் பக்கத்திலே ஒரு ஊரிலே இருந்தார்கள்.

அந்த காலத்திலே இந்த பக்கத்திலே ஒரு ஜமிந்தார் இருந்தார். வெங்களப்ப நாயக்கர் என்று பெயர்.

அவர் தான் மிதிலைப்பட்டி கிராமத்தை எங்களுக்குக் கொடுத்தார். அது சம்பந்தமான சாசனம் கூட இப்போது எங்கள் வீட்டிலே இருக்கின்றது.

எங்களுக்கு இப்போது ஜீவாதாரணமாக இருப்பது அது ஒன்று தான். நாங்கள் இன்றைக்கு கஷ்டமில்லாமல் நல்லபடியாக இருக்கின்றோம் என்றால் அதற்கு காரணம் வெங்களப்ப நாயக்கர் தான்.

அவருடைய அன்னத்தைத் தான் நாங்கள் இப்போது சாப்பிட்டு வருகின்றோம். அவர் போட்ட சோறு அது. இப்படி சொல்லிக் கொண்டே வந்தார்.

பொழுது விடிந்தது. வண்டி மிதிலைப்பட்டிக்கு வந்து சேர்ந்தது. கவிராயர் இறங்கினார். வீட்டு வேலைக்காரனைக்கூப்பிட்டார். வண்டிக்காரனுக்கு பழையது கொண்டு வந்து கொடு என்றார்.

அப்போது வண்டிக்காரன் ஐயா எனக்கு சாப்பாடு வேண்டாம். நான் போய் வருகின்றேன் உத்தரவு கொடுங்கள் என்றார்.

நீ ஊருக்கு போய் சேர்வதற்குள் நாழியாகிவிடும். சாப்பிட்டுப்போ என்றார்.

எனக்கு இப்போது பசி இல்லை. என்றான் அவன்.சரி இந்தா வண்டி வாடகை என்று சொல்லி மூன்று ரூபாவை நீட்டினார்.

இது உங்களிடமே இருக்கட்டும். எனக்கு வேண்டாம் நான் போய்வருகின்றேன் என்று கிளம்பினான்.

என்னப்பா இது மூன்று ரூபாய் தானே பேசினது. இன்னும் அதிகமாக ஏதும் வேண்டுமா என்றார் அவர்.

அதெல்லாம் ஒன்றுமில்லைங்க. நீங்கள் ஒன்றும் தவறாக நினைத்து விடக்கூடாது. என்று சொல்லிவிட்டு கம்பீரமாக அவன் கிளம்பினான்.

என்ன காரணம் என்றாவது சொல்லிவிட்டுப் போ என்றார் கவிராயர். அப்போது தான் வண்டிக்காரன் சொன்னான்.ஐயா நேற்று இரவு உங்கள் முன்னோர்களைப் பற்றி சொல்லிக் கொண்டு வந்தீர்களே.அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையிலே பிறந்தவன் தான் நான்.

ஏதோ என் தலைவிதி அப்படி வண்டி ஓடிக்கொண்டிருக்கின்றேன். எங்கள் வீட்டுப் பெரியவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் என்ன தான் ஆனாலும் சரி கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது என்று சொல்லுவார்கள்.

எங்கள் முன்னோர்கள் உங்களுக்கு கொடுத்ததிலிருந்து ஒரு சின்ன துரும்பைக்கூட திரும்பவாங்குவதற்கு என் மனது இடம் கொடுக்கவில்லை.மன்னித்துவிடுங்கள்.

ஏதோ இந்த அளவிற்காவது நான் உங்களுக்கு உபயோகப்படுகின்ற மாதிரி கடவுள் கருணை செய்தாரே அது என்னுடைய பாக்கியம் என்று சொல்லிவிட்டு வண்டியை ஓடிக்கொண்டு அந்த ஆள் போனார்.

இப்போது நீங்கள் கேட்பது கற்பனைக் கதையில்லை. நிஜமாக நடந்தது.

இந்த சம்பவத்தை அந்த கவிராயர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரிடம் சொல்லியிருக்கின்றார்.அவர் இதை நமக்கு சொல்லியிருக்கின்றார்.

இந்த குறிப்பை ஒரு சின்ன புத்தகத்திலே பார்த்தேன்.அதை என் நண்பர் ஒருவரிடம் கொடுத்து படித்து விட்டு கொடுங்கள் என்றேன்.

கொஞ்ச நாள் கழித்து அவர் மட்டும் வந்தார். புத்தகம் வரவில்லை.நான் அதைக் கண்டு கொள்ளாமல் என்னங்க புத்தகத்தை படித்துப்பார்த்தீர்களா என்றேன்.

படித்துப் பார்த்தேன் வெங்களப்ப பரம்பரை மாதிரியே நானும் ஒரு நல்ல முடிவிற்கு வந்தேன். என் பரம்பரைக்காக புதிதாக ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டேன் என்றார்.

என்னங்க அது? என்றேன். கொடுத்ததை திரும்ப வாங்கக்கூடாது என்பது அவர்கள் கொள்கை வாங்கியதை திரும்ப கொடுக்கக்கூடாது என்பது எங்கள் கொள்கை என்றார்.

நானும் அவரிடம் கொடுத்த புத்தகத்தை அந்த விநாடியே மறந்து விட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலுகுமார் எம்.பி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிற்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார். (நி-6)


## மணிவிழா வாழ்த்து

திரு. பொன்னையா நித்தியானந்தம்




யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 20 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி 08.08.2024 அன்று தனது 60ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் சென்ற திரு.பொன்னையா நித்தியானந்தம் அவர்களின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துவதோடு அவர் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் உடல் உள ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்- ஊழியர் நலன்புரிச் சங்கம், பொதுசன நூலகம், யாழ்ப்பாணம். (T-991)





## நல்லைக் கந்தவேளே!

தாயாகித் தந்தையுந் தானாகிக் கோனாகி
தளர்விலாச் சத்தியாகி
நோயாகி நோய்த்தீர்க்கும் மருந்தாகி விருந்தாகி
நுண்நுழை புலமுமாகி
தேயாது தெவிட்டாது செகமெலா மோயாது
தித்திக்கும் முத்தியாகி
ஆயா! வுன் அருள்மேன்மை அணையாத தீபமே
அருநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம்,
நவ.பாலகோபால்.


## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



திரு.முருகேசு சந்திரலிங்கம்
பாடசாலைப் பணியாளர் (விசேட தரம்1)

Best Wishes

சேவை விபரம்
யா/பெரியபுலம் ம.வி
1994.05.10-2014.11.30
யா/இந்து மகளிர் கல்லூரி
2014.12.01-2017.02.21
யா/பெரியபுலம் ம.வி
2017.02.22-2024.08.18

பாடசாலைப் பணியினை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி 18.08.2024 இல் இருந்து ஓய்வு பெறும் மணிவிழா நாயகனை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம். (700)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.


## கந்தவடிவேளே வா...

செல்லுமிடம் எங்கும் வழிப்பறி கொள்ளை
வல்லமைகள் காட்டி வாள்வெட்டு விபத்து
பள்ளத்தில் சரிந்த சமூக சீரழிவை
எள்ளி நகைக்கிறார் ஏளனம் செய்கிறார்
கொடிகட்டி பறந்த யாழ் மண்ணின் மானம்
பொடியாகிப் போச்சு திருந்த இடமில்லை
விடிவு காட்டு வினைகள் போக்கு
அடி தொழுதேன்
நல்லைக்கந்தவேளே ஓடிவா



மானந்தன்,
அல்வாய்.

# இராசிபலன்

16.08.2024
ஆடி 31, வெள்ளிக்கிழமை
ஏகாதசி காலை 6.45 மணிவரை
துவாதசி பின்னிரவு 5.57 மணிவரை

மூலம் முற்பகல் 10.50 மணி வரை
சுபநேரம்-6.05-7.35 மணிவரை
இராகுகாலம்-10.35-12.05 மணிவரை
ஏகாதசி விரதம், வரலட்சுமி

விரதம், அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை.

வளவன்


மேஷம்

இழுபறியாக இருந்த கரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


கடகம்

மறைமுக எதிர்ப்புகள்கள் மறையும், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உறசாகம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


துலாம்

வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.


மகரம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


ரிஷபம்

மனக்குழப்பம் அகல இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, உடல்நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.


சிம்மம்

பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனையாற்றலால் சிறப்படைவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.


விருச்சிகம்

குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் வருகையுண்டு.


கும்பம்

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், வழிபாட்டில் ஆர்வம்-கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், கௌரவமான நாள், போசன சுகமுண்டு.


கன்னி

பக்குவமாக நடந்து கொண்டு பாராட்டு பெறும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழி[illegible] செய்வீர்கள்.


தனுசு

காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், மற்றவர்கள் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக [illegible] கட்டுப்பாடு தேவை.


மீனம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும்.

நல்ல நட்பை இழப்பதை விட கொஞ்சம் பணத்தை இழப்பது மேலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் சிறப்புற இடம்பெற்ற மடு மாதாவின் ஆவணித்திருவிழா





(மன்னார்)

மடு அன்னையின் ஆவணித் திருவிழா நேற்றுக் காலை 6.15 மணிக்கு சிலாப மறை மாவட்ட ஆயர் கலாநிதி விமல் சிறி ஜயசூரிய ஆண்டகை தலைமையில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் அதனைத் தொடர்ந்து ஆசியும் இறை மக்களுக்கு வழங்கப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் 7 லட்சம் வரையிலான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

## நடை பவனி

(யாழ்ப்பாணம்)

யா/ இராமநாதன் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபவனியானது இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயிலில் ஆரம்பிக்கப்பட்டு இராமநாதன் கல்லூரியை வந்தடைந்து நிறைவு பெறும். (நி-6)

## சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு



(தருமபுரம்)

சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் வரை துவிச்சக்கர வண்டி விழிப்புணர்வு பயணம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக ஆரம்பமான குறித்த விழிப்புணர்வு பயணம் மாங்குளம் ஒலுமடுவில் நிறைவடைந்தது.

ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி, கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளன தலைவர் சு.யதீஸ்வரன், முருகானந்தா கல்லூரியின் முதல்வர் அ.பங்கயற்செல்வன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந்திரா குழுமத்தின் பணிப்பாளர் ம.ரஜீதன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த துவிச்சக்கர வண்டி பயணத்தில் யாழ்.பல்கலைக் கழக கல்லூரி பண்ணை இயந்திரவியல் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (நி-6-316)

## வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் மஹோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி- வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாக்களில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் அன்று இரவு உறியடித்திருவிழாவும் இடம்பெற்று மறுநாள் புதன் கிழமை தீர்த்தத்திருவிழாவும் அன்று இரவு கொடியிறக்க வைபவ நிகழ்வும் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

## வயோதிப் பெண்ணிடம் தங்கச்சங்கிலி அறுப்பு

(நெளுக்குளம்)

வண்ணாங்குளம் பகுதியில் இருந்து வைத்தியசாலைக்குச் சென்ற வயோதிப பெண் ஒருவரை வீதியில் தாக்கிவிட்டு கழுத்தில் இருந்த தங்கச் சாங்கிலியினை அறுத்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு வண்ணாங்குளம் கிராமத்தில் இருந்து உண்ணாப்பிலவு வைத்திய சாலைக்கு மாதாந்த சிகிச்சைக்கு சென்ற வயோதிப பெண் ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த 25. 24 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் தாக்கிவிட்டு கழுத்தில் அணிந்திருந்த 5 பவுண் தங்கச்சங்கிலியினை அறுத்து சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-299)

## குடிசன தொகை மதிப்பீடு தொடர்பான தெளிவூட்டல்



(கிளிநொச்சி)

அரசாங்கத்தினால் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 15ஆவது குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்புக் கணக்கெடுப்புப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் தொகைமதிப்பு ஆணையாளர், பிரதி மற்றும் உதவித் தொகைமதிப்பு ஆணையாளர்களுக்கான தெளிவூட்டல் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட புள்ளி விபரவியலாளரும் உதவி தொகைமதிப்பு அத்தியட்சகருமான சி.ஜெயவிந்தன் தலைமையில், தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபரும், தொகை மதிப்பு ஆணையாளருமான எஸ்.முரளிதரன் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு அறிமுகம், தொகை மதிப்பின் கட்டங்கள், தொகை மதிப்பின் ஒழுங்கமைப்புக் கட்டங்கள், குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பு கணக்கிடும் சட்டங்கள், சேகரிக்கப்படும் தகவல்கள், உத்தியோகத்தர்களின் வகிபாகம், கால அட்டவணை தொடர்பான விளக்கங்கள் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (நி-6-100-316)

## பரசூட் முறையில் பயிரிடப்பட்ட வயல் அறுவடை விழா



(முல்லைத்தீவு)

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் கோட்டை கட்டிய விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட அம்பலப் பெருமாள்குளம் பகுதியில் பரசூட் நடுகை முறை மூலம் பயிரிடப்பட்ட நெற்செய்கையின் அறுவடையும் புதிய தொழில் நுட்ப பாவனை தொடர்பில் விவசாயிகளிற்கான விழிப்பூட்டல் நிகழ்வும் கடந்த திங்கட் கிழமை அம்பலப்பெருமாள் குளத்தில் முல்லைத்தீவு முல்லை மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. யாமினி சசீலன் தலைமையில் இடம்பெற்றது. (நி-6)

## 3 கிலோ கஞ்சாப் பொதியுடன் நுணாவிலில் ஒருவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் உள்ள விடுதியொன்றில் இருந்து நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நபர் ஒருவர் மூன்று கிலோ கஞ்சா பொதியுடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கொழும்புப் பகுதியைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர் நுணாவில் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளையிலேயே இவ்வாறு கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப்போகும்போது உதவும் உறவை விட விழும் போது தாங்கும் உறவு சிறந்தது.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தலிலேனும் ஒன்றுபட்டு நில்லுங்கள்

எம் தமிழ் இனத்தின் தலைவிதியை நினைக்கும் போதெல்லாம் வேதனை நெஞ்சை அடைக்கும். அந்தளவுக்கு எங்கள் இனம் நிர்க்கதியாகி நிற்கிறது.

உண்மை. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப் போகிறது.

இருந்தும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? என்பதை ஆணித்தரமாகக் கூறுவதற்கு தமிழ் இனத்தில் ஆன அரசியல் தலைமை இல்லை என்றாயிற்று.

இதையும் கடந்து எம் தமிழ் இனத்தில் ஒற்றுமை இல்லாத காரணத்தால், ஆளுக்கு ஆள் தம்பாட்டில் சந்திப்புக்களை நடத்துகின்ற நிலைமையும் காணப்படுகிறது.

ஆம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளார்.

அதேநேரம் ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் தனியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளன.

இதேவேளை ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக ஏலவே கூறியுள்ளன.

இதையும் கடந்து, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

அதிலும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என உடன்படிக்கை செய்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் அந்தப் பட்டியலில் இடம்பெறுவதுதான் ஆச்சரியமான விடயம்.

சிலவேளைகளில் தெனாலிஇராமன் போல, ஆதரவு தெரிவிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும் பட்டியலில் சேர்த்து சம்பந்தப்பட்ட கட்சி நாடகத்தை அரங்கேற்றியிருக்கலாம்.

அவ்வாறானதொரு பட்டியல் தயாரிக்கப்படுகின்றதாயின், அந்தளவுக்கு நாம் பலவீனமாக இருக்கிறோம் என்பதுதான் உண்மை.

எதுஎவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை பதட்டத்தோடு சீவிக்கின்ற நிலைமையே உள்ளது.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் நம் தமிழ்த் தரப்புகள் என்ன முடிவை எடுக்கவுள்ளனவோ, அவர்கள் எடுக்கின்ற முடிவுகளால் எம் தமிழ் மக்களின் எதிர்காலம் மிகவும் மோசமாகி விடுமோ என்ற ஏக்கம் இருக்கவே செய்கிறது.

இதையும் கடந்து, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ்த் தரப்புகள் செய்து வைக்கின்ற கூத்துக்கள் தமிழ்க் கட்சிகளிடையே உள்ளக முரண்பாடுகளைத் தோற்றுவித்து, இருந்த ஒற்றுமையையும் நாசமறுத்து விடுமோ என்ற பயப்பீதியும் இருக்கவே செய்கிறது.

ஆகையால், ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தியேனும் நம் தமிழ்த் தரப்புகள் ஒற்றுமைப்பட்டு ஒன்றுபட்ட தீர்மானத்தை எடுப்பது காலத்தின் கட்டாய தேவை.

# சமூக மாற்றங்களை உருவாக்க பொதுஜன பெரமுன தயார்

## நாமல் ராஜபக்ஷ

சமூக மாற்றங்களை உருவாக்க பொதுஜன பெரமுன தயார் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக நாட்டைப் பாதுகாக்கவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும், தொழில் முனைவோரைப் பாதுகாக்கவும் மகத்தான சக்தியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வேட்புமனுக்களை வழங்கியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாத்து நாட்டிற்கு ஏற்ற பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை உருவாக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை வெற்றிபெறச் செய்வதற்கு கட்சிகள் பாடுபடும் என்ற வலுவான நம்பிக்கை இருப்பதாகவும் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# ஐஸ் போதையுடன் இருவர் கைது

*(கொடவத்தை)*

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொடவத்தைப் பகுதியில் போதைப் பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொடவத்தைப் பகுதியில் வசிக்கும் 35 மற்றும் 53 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில், ஒருவரிடமிருந்து 150 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் மற்றையவரிடமிருந்து 12 கிராம் 720 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 98,700 ரூபா பணம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# குளவிக் கொட்டு எழுவர் படுகாயம்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் கீழ்ப் பிரிவு தோட்ட தேயிலை மலையில் தேயிலை பறித்து கொண்டிருந்த 7 தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. (ம-7)

# வாகன விபத்து ஒருவர் மரணம்

*(குருணாகல்)*

குருணாகல், நாரம்மல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடஹபொல - கட்டுபொத்த வீதியில் கடஹபொல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

பரகஹகொடுவ, பஹமுனை பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தி ஒன்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் நாரம்மல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது, சடலம் குருணாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு,

மேலதிக விசாரணைகளை நாரம்மல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# 17 இந்திய மீனவர்கள் நாடு திரும்பினர்

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகாரியாலயம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவப் பிரச்சினை தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில், இராஜதந்திர மட்டத்தில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில், குறித்த மீனவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பேருந்து விபத்து

# மாணவர்கள் உட்பட 19 பேர் வைத்தியசாலையில்

அநுராதபுரம் பாதெனிய பிரதான வீதியில் இரண்டு பேருந்துகள் மோதியதில் மாணவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற சிசுசரிய பேருந்தும், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தும் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிசுசரிய பேருந்து மாணவர்களை ஏற்றுவதற்காக நிறுத்தப்பட்ட போது, பின்னால் வந்த பேருந்து சிசுசரிய பேருந்தின் பின்புறம் மோதியது.

விபத்தில்நான்கு மாணவர்கள், பேருந்தின் சாரதி மற்றும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தில் பயணித்த 14 பெண்கள் படுகாயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7)

# குளவிக் கொட்டு விவசாயி உயிரிழப்பு

*(அநுராதபுரம்)*

அநுராதபுரம், பரசன்கஸ்வெவப் பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பரசன்கஸ்வெவ, பலுகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த ஹெட்டி ஆராச்சிலாகே சுனில் என்ற 65 வயதுடைய விவசாயி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

[illegible] டிக்கைகளில் ஈடுபட்டு மதியம் வீடு திரும்பியுள்ள நிலையில், பின்னர் தனது வீட்டில் உள்ள குளவிக் கூடு ஒன்றை உடைக்க முயன்ற போது குளவிக் கொட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்தவர் பரசன்கஸ்வெவ்பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக [illegible] தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

11

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 41.99% வாக்குகளைப் பெற்றார். கோட்டாபய ராசபக்ஷ இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஐந்து மாவட்டங்கள், மலையகத்தின் நுவரெலியா மாவட்டம் ஆகியவை தவிர்ந்த ஏனைய 16 மாவட்டங்களிலும் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கோட்டாபய ராசபக்ஷ 2019 நவம்பர் 18 அன்று அதிகாரபூர்வமாக இலங்கையின் 7ஆவது அரசுத்தலைவராகப் பதவியேற்றார். 35 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்தனர். அவர்களின் பெயர்கள் கட்சிகள் மற்றும் வாக்குகளின் எண்ணிக்கை அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| 26 நவம்பர் 2019 இலங்கை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் | | | |
|---|---|---|---|
| வேட்பாளர் | கட்சி | பெற்ற வாக்குகள் | % |
| கோட்டாபய ராஜபக்ச | இலங்கை பொதுசன முன்னணி | 6,924,255 | 52.25% |
| சஜித் பிரேமதாச | புதிய சனநாயக முன்னணி | 5,564,239 | 41.99% |
| அநுர குமார திசாநாயக்க | மக்கள் சக்திக்கான தேசிய இயக்கம் | 418,553 | 3.16% |
| மகேஷ் சேனநாயக்க | தேசிய மக்கள் கட்சி | 49,655 | 0.37% |
| எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா | சுயேச்சை | 38,814 | 0.29% |
| ஆரியவன்ச திசாநாயக்க | சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 34,537 | 0.26% |
| அஜந்தா பெரேரா | இலங்கை சோசலிசக் கட்சி | 27,572 | 0.21% |
| ரொகான் பல்லேவத்த | தேசிய அபிவிருத்தி முன்னணி | 25,173 | 0.19% |
| சிறிபால அமரசிங்க | சுயேச்சை | 15,285 | 0.12% |
| மில்ரோய் பெர்னாண்டோ | சுயேச்சை | 13,641 | 0.10% |
| ம. க. சிவாஜிலிங்கம் | சுயேச்சை | 12,256 | 0.09% |
| பத்தரமுல்ல சீலரத்தன | சன செத்த பெரமுன | 11,879 | 0.09% |
| அஜந்தா டி சொய்சா | ருகுணு மக்கள் முன்னணி | 11,705 | 0.09% |
| அநுருத்த பொல்கம்பொல | சுயேச்சை | 10,219 | 0.08% |
| நாமல் ராசபக்ச | தேசிய ஐக்கிய கூட்டணி | 9,497 | 0.07% |
| ஜெயந்தா கெட்டகொட | சுயேச்சை | 9,467 | 0.07% |
| துமிந்த நாகமுவ | முன்னிலை சோசலிசக் கட்சி | 8,219 | 0.06% |
| அபரெக்கே புன்னானந்த | சுயேச்சை | 7,611 | 0.06% |
| சுப்பிரமணியம் குணரத்தினம் | நமது தேசிய முன்னணி | 7,333 | 0.06% |
| ஏ. எசு. பி. லியனகே | இலங்கை தொழில் கட்சி | 6,447 | 0.05% |
| பியசிறி விஜேநாயக்க | சுயேச்சை | 4,636 | 0.04% |
| அருணா டி சொய்சா | சனநாயக தேசிய இயக்கம் | 4,218 | 0.03% |
| ரஜீவ விஜேசிங்க | சுயேச்சை | 4,146 | 0.03% |
| இல்லியாசு இத்ருசு முகமது | சுயேச்சை | 3,987 | 0.03% |
| சிறிதுங்க ஜயசூரிய | ஐக்கிய சோசலிசக் கட்சி | 3,944 | 0.03% |
| சரத் கீர்த்திரத்தின | சுயேச்சை | 3,599 | 0.03% |
| சரத் மனமேந்திரா | புதிய சிங்கள மரபு | 3,380 | 0.03% |
| பானி விஜேசிறிவர்தன | சோசலிச சமத்துவக் கட்சி | 3,014 | 0.02% |
| அசோகா வதிகமன்கவ | சுயேச்சை | 2,924 | 0.02% |
| ஏ. எச். எம். அலவி | சுயேச்சை | 2,903 | 0.02% |
| சமன் பெரேரா | மக்கள் கட்சியின் நமது சக்தி | 2,368 | 0.02% |
| பிரியந்த எதிரிசிங்க | ஒக்கம வெசியோ ஒக்கம ரஜவரு சன்விதானய | 2,139 | 0.02% |
| சமரவீர வீரவன்னி | சுயேச்சை | 2,067 | 0.02% |
| பெத்தே கமகே நந்திமித்திரா | நவ சமசமாஜக் கட்சி | 1,841 | 0.01% |
| சமன்சிறி ஹேரத் | சுயேச்சை | 976 | 0.01% |
| செல்லுபடியான வாக்குகள் | | 13,252,499 | 100% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 135,452 | 1.01% |
| மொத்த வாக்குகள் | | 13,387,951 | 83.72% |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | | 15,992,096 | |

| 26 நவம்பர் 2019 இலங்கை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வடக்கு மற்றும் கிழக்கு | | | | | |
|---|---|---|---|---|---|
| வேட்பாளர் | யாழ் | வன்னி | மட்டு | திருமலை | அம்பாறை |
| கோட்டாபய ராஜபக்ச | 23,261 | 26,105 | 38,460 | 54,135 | 135,058 |
| சஜித் பிரேமதாச | 312,722 | 174,739 | 238,649 | 166,841 | 259,673 |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 6,845 | 1,295 | 800 | 489 | 369 |
| எஸ் குணரத்தினம் | 917 | 290 | 302 | 146 | 182 |

வரலாற்றில் முதல் முறையாக அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிட்ட அரசுத்தலைவர் தேர்தல் இதுவாகும். மொத்தம் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். கட்சி சார்பாகத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ரூ.50,000 உம் சுயேட்சையாகப் போட்டியிடுபவர்கள் ரூ.75,000 உம் கட்டுப்பணங்களாக செலுத்த வேண்டும். கட்டுப்பணங்களைத் தக்க வைத்துக் கொள்ள அவர்கள் ஆகக்குறைந்தது 5% வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். போட்டியிட்டவர்களில் கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ தவிர்ந்த ஏனைய 33 பேரும் தமது கட்டுப்பணங்களை இழந்தனர்.

### ஜனாதிபதித் தேர்தல் -2022

2022 இலங்கை அரசுத்தலைவர் தேர்தல் 2022 ஜூலை 20 அன்று நடைபெற்றது. முன்னாள் அரசுத்தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ ஜூலை 14 அன்று பதவி விலகியதை அடுத்து அவரது பதவிக்காலம் முடியும் வரை 9ஆவது அரசுத்தலைவரைத் தேர்ந்தெடுக்க நாடாளுமன்றத் உறுப்பினர்களி டையே இரகசிய வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இத்தேர்தலுக்கான வேட்பாளர்கள் ஜூலை 19 அன்று பாராளுமன்றத்தில் பரிந்துரைக்கப்பட்ட னர்.

2022 ஜூலை 20 இல் நடந்த இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகள் பெற்று நிறைவேற்றதிகாரம் கொண்ட 8ஆவது அரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1981 ஆம் ஆண்டின் அரசுத்தலைவர் தேர்தல்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்படி "அரசியலமைப்புச் சட்டத்தின் 40ஆவது பிரிவில் கூறப்பட்டபடி, அரசியலமைப்பின் 38 ஆவது பிரிவு பற்றி (1) இன் படி அரசுத்தலைவரின் பதவி வெறுமையாக இருந்தால், பாராளுமன்றம் அதன் உறுப்பினர் ஒருவரை அரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கும்.

அரசுத்தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியுடைய அதன் உறுப்பினர்களில், பதவியை விட்டு வெளியேறும் அரசுத்தலைவரின் பதவிக்காலம் முடிவடையாத காலத்திற்கு பதவியில் இருக்க வேண்டும்." எனவே, கோட்டாபய ராஜபக்ஷ ஜூலை 14 அன்று பதவி விலகியதைத் தொடர்ந்து 2024 நவம்பரில் முடிவடைய விருந்த ராஜபக்ஷவின் எஞ்சிய பதவிக் காலத்திற்குப் பணியாற்றுவதற்கு பாராளுமன்றத்தால் அரசுத்தலைவர் ஒருவர் 30 நாட்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இந்த செயல்முறை இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகரால் வழி நடத்தப்படுகிறது. இத்தேர்தலில் சபாநாயகருக்கும் வாக்களிக்கும் உரிமை உள்ளது. வாக்குப்பதிவு இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.

2022 ஜூலை 19 அன்று, அரசுத் தலைவர் பதவிக்கான பரிந்துரைகள் பாராளுமன்றத்தில் கோரப்பட்டது. இலங்கை பொதுசன முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன ரணில் விக்கிரமசிங்கவை முன்மொழிந்தார், அமைச்சர் மனுச நாணயக்கார அதனை உறுதிப்படுத்தினார். அரிணி அமரசூரியா அனுர குமார திசாநாயக்கவை முன்மொழிய விஜித ஹேரத் உறுதிப்படுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, டளஸ் அளகப்பெருமவை முன்மொழிய, ஜி. எல். பீரிஸ் அதனை வழிமொழிந்தார். பாராளுமன்றத்தின் பொதுச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான தம்மிக்க தசநாயக்க வேட்பாளர்களின் பெயர்களை அறிவித்தார்.

இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக பாராளுமன்றம் ஜூலை 20 காலை 10 மணிக்குக் கூடியது, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டுமே உரிமை உண்டு. பல வேட்பாளர்கள் இருக்கும்போது விருப்பங்களைக் குறிக்கும் விருப்பத்துடன், வேட்பாளரின் பெயருக்கு முன்னால் உள்ள பெட்டியில் "1" என்ற எண்ணைக் கொண்டு அந்த வாக்கைக் குறிக்க வேண்டும்.

வாக்களித்த பிறகு, ஒவ்வொரு வேட்பாளருக்கும் பதிவான வாக்குகள் எண்ணப்படும். ஒரு வேட்பாளர் பதிவான செல்லுபடியாகும் வாக்குகளில் பாதிக்கும் மேல் பெற்றால், தேர்தல் நடத்தும் அலுவலர், அந்த வேட்பாளர் அரசுத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக உடனடியாக அறிவிப்பார்.

எந்த வேட்பாளரும் பதிவான செல்லுபடியாகும் வாக்குகளில் பாதிக்கும் மேல் பெறவில்லை என்றால், குறைந்த வாக்குகள் பெற்ற வேட்பாளர் போட்டியில் இருந்து வெளியேற்றப்படுவார். போட்டியிலிருந்து நீக்கப்பட்ட வேட்பாளருக்கு முதல் விருப்பு வாக்களித்த ஒவ்வொரு உறுப்பினரும் தங்களின் இரண்டாவது விருப்பம் தெரிவித்திருந்தால், அவர்கள் அந்தந்த வேட்பாளருடன் சேர்க்கப்படுவார்கள்.

எந்த வேட்பாளரும் செல்லுபடியாகும் வாக்குகளில் பாதிக்கு மேல் பெறாவிட்டாலும், ஒவ்வொரு கணக்கீட்டிலும் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு, இரண்டாவது, மூன்றாவது போன்றவற்றில் மீதமுள்ள வேட்பாளர்களுக்கு வாக்குகள் சேர்க்கப்படும்.

அவ்வாறு, எந்த ஒரு வேட்பாளரும் செல்லுபடியாகும் வாக்குகளில் பாதியைப் பெறவில்லை என்றால், மேற்கண்டவாறு வாக்கு எண்ணிக்கையின் முடிவில் அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் குடியரசுத் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிககப்படுவார். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையே வாக்குகள் சமமாக இருக்கும் போது, தேர்தல் நடத்தும் அலுவலரின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் வெற்றியாளர் அறிவிக்கப்படுவார்.

### முடிவுகள்

ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் க்ட்சி 134 (61.19%), டளஸ் அளகப்பெரும, இலங்கை பொதுசன முன்னணி 82(37.44%), அனுர குமார திசாநாயக்க, மக்கள் விடுதலை முன்னணி 3 (1.37%), மொத்த வாக்குகள் 219, செல்லுபடியான வாக்குகள் 219 (98. 21%), செல்லாத/ வெற்று வாக்குகள் 4(1.79%), மொத்த வாக்குகள் 225, பதிவான வாக்குகள்/வருகை 223(99.11%)

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரிமலை...

டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை ஆலயத் திற்கு நிர்வாகத்தினரும் மக்களும் செல்லவுள்ள நிலையில் பொங்கல் வழிபாடுகளும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்தும் எதிர்வரும் வாரங்களி லும் வெள்ளிக்கிழமைகளில் வழிபாடு களுக்கு மக்கள் செல்லமுடியும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இன்று காலை 08 மணி முதல் மாலை 05 மணி வரை ஆலயத் திற்குச் செல்வதற்கும் சிரமதானப் பணிகளில் ஈடுபடவும் அடியவர்களைக் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

## ‘கோப்பிக்...

நாயக முன்னணியின் ஜனாதிபதி தேர் தல் வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றம் போல காணப் படும் ஒழுக்கம், அமைதி பேணப்படும் எனத் தெரிவித்துள்ள அவர் இம்முறை அது "கோப்பிக்கடை" போல காணப் படுகின்றது என விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதல் பிரஜையாக விரும்பு பவர்களின் நடத்தைகள் கவலையளிக் கும் விதத்தில் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்

ஒரு வேட்பாளரை வெற்றி பெறச் செய்வதற்காக பல "டம்மி" வேட்பாளர் கள் நிறுத்தப்பட்டுள்ளனர், ஒரு வேட் பாளருக்காக 15 முதல் 20 வரை யிலான "டம்மி" வேட்பாளர்கள் நிறுத் தப்பட்டுள்ளனர், அவர்கள் காடையர் கள் போல நடந்துகொண்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## பாராளுமன்றம்...

பட்டதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரி வித்தார்.

அதற்கமைய, ஓகஸ்ட் 21ஆம் திகதி மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப் பட்டுள்ளது.

அதனையடுத்து மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2366/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி யில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மற்றும் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத் தின் கீழ் 2387/38 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்ட ஒழுங்குவிதிகளை விவாதத் துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனாதிபதித்...

தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு 03 ஆட்சேபனை கள் கிடைத்திருந்தன.

பத்தரமுல்லை சீலரதன தேரரால் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரை குறிப் பிடாமல் ஒரு ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின் (PUCSL) முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு எதிராக இரண்டு ஆட்சேபனைகள் முன் வைக்கப்பட்டன.

எனினும், ஆட்சேபனைகளை பரி சீலித்த தேர்தல் ஆணைய உறுப் பினர்கள், தேர்தல் சட்ட விதிகளின் படி, ஆட்சேபனைகளை நிராகரிக்க ஏகமனதாக முடிவு செய்தனர்.

இந்நிலையில், நேற்று வேட்பு மனுக் களை கையளித்த 39 வேட்பாளர்களும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

39 வேட்பாளர்களில் 22 பேர் அங்கீ கரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளையும், ஒருவர் மற்றைய கட்சிகளையும் 16 சுயேட்சை வேட்பாளர்களையும் சேர்ந்த வர்கள் எனத் தேர்தல்கள் ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## பெண்ணை...

வீதியில் தாக்கிவிட்டு கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியினை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு வண்ணாங்குளம் கிராமத்தில் இருந்து உண்ணாப்பிலவு வைத்தியசாலைக்கு மாதாந்தச் சிகிச் சைக்குச்சென்ற வயோதிபப்பெண்ணை மோட்டார் சைக்கிளில் வந்த 25, 24 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர் கள் தாக்கிவிட்டு கழுத்தில் அணிந் திருந்த 5 பவுண் தங்கச்சங்கிலியினை அறுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக முல் லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் முல்லைத்தீவுப் பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## பயணிகள்...

இதனைத் தொடர்ந்து நாளை காலை 10 மணிக்கு காங்கேசன்துறை துறை முகத்தில் இருந்து புறப்பட்டு மதியம் நாகப்பட்டினத்தை அடையவுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக் கிழமை முதல் காலை 8 மணியளவில் நாகபட்டினத்திலிருந்து புறப்பட்டு நண்பகல் 12 மணியளவில் காங்கே சன் துறையை வந்தடைந்து மீண்டும் காங்கேசன்துறையிலிருந்து மதியம் 2 மணிக்குப் புறப்பட்டு மாலை 6 மணிக்கு நாகபட்டினத்தினை அடையும் வகை யில் தினசரி கப்பல்சேவையாக இதனை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ள தாக கப்பல் சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது

இந்தப் பயணி கள் கப்பல்போக்கு வரத்துச் சேவை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில், சீரற்ற காலநிலை கார ணமாக கடந்த வருடம் ஒக்ரோ பர் 23ஆம் திகதி இடைநிறுத்தப் பட்டது.

இந்நிலையில், கடந்த 10ஆம் திகதி 'சிவகங்கை' பயணிகள் கப்ப லின் சோதனை ஓட்டம் நடைபெற் றது.

இ ந் த ச் சோதனை ஓட்டம் வெற் றிகரமாக நிறைவடைந்த நிலையில், நாகப் பட்டினம் முதல் காங் கேசன் துறைக்கான பயணிகள் கப் பல் போக்குவரத் துச் சேவை இன்று முதல் மீள ஆரம் பிக்கப்பட விருப்ப தாக உத்தியோக பூர்வமாக அறி விக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

## மக்கள் மாற்...

கல் செய்த பின்னர் கருத்துத் தெரி விக்கையில்,

இதனைக் குறிப்பிட்டுள்ள அவர் கடந்தகாலங்களில் பல தேர்தல்கள் நடைபெற்றுள்ள போதிலும் மக்கள் பல வருடங்களாக துயரங்களை எதிர் கொண்டுள்ளனர் எனக் குறிப்பிட் டுள்ளார்.

எங்களால் இந்தத் தேர்தலில் வெற்றி பெற முடியும், இந்தத் தேர்தலை மக் களையும் துன்பத்திலிருந்து மீட்பதற் காக, காப்பாற்றுவதற்காக எங்களால் பயன்படுத்த முடியும், தேசிய மக்கள் சக்தியால் அதன் வேட்பாளரால் மாத் திரம் இதனைச் செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## சின்னங்கள்...

ராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமையல் எரிவாயு சின்னம் கிடைக்கப் பெற்றுள்ளது. தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கிய செல்வம் அரியநேத்திரனுக்கு சங்கு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகாவுக்கு "லாந்தர்" விளக்கு சின்னமும் அநுரவுக்கு திசைகாட்டி யும் சஜித்துக்கு தொலைபேசியும் சின் னமாக வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2024.08.15
சீட்டிழுப்பு இலக்கம் 5566
F 3 3 3 1 1 8
அத சம்பத F 3 1 1 8
சீட்டிழுப்பு இலக்கம் 141

மெகா பவர் BONANZA
திகதி 2024.08.15
சீட்டிழுப்பு இலக்கம் 1914
U 12 19 31 44 45
09521
ரூ. 1,000,000/- இலக்கம் 562134
ரூ. 500,000/- இலக்கம் 216039
694005

தன நிதானய
திகதி - 2024.08.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1596
U 06 09 47 62 U
79843

லக்கி 7 VIP
திகதி 2024.08.15
சீட்டிழுப்பு இலக்கம் 0392
Q 5 8 9 6 2 8 Q

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3808
சீட்டிழுப்பு திகதி 15.08.2024
W 25 47 49 77
W 95433

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.15
சீட்டிழுப்பு இலக்கம் 0875
தனுசு 06 14 38 56 தனுசு
65858 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.08.2024 வெற்றி வாரம் 274 வர்ணம் மஞ்சள்
U 7 3 9 8 6 0
32745
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,133,580.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2540 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 15.08.2024 தினம் வியாழன்
04 11 21 68 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,131,654.40

சனிதா
திகதி 2024.08.15 வெற்றி வாரம் 4701 வர்ணம் சிவப்பு
08 15 41 44 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,597,390.40
27534

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4252 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.15 தினம் வியாழக்கிழமை
04 17 21 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,375,801.20
220081

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 13 06 42 60 69
1716 சமெஞ்சள் 15.08.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 539,217,588.60

அட கோடீபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,020,276.80
35 38 52 62 W
314404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

அதன்படி, பாரபட்சம் ஏற்படுத்தும் வகையில் வேட்பாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கக் கூடாது என்பதுடன், ஜனாதிபதி தேர்தல் முடிந்து ஒரு வாரம் வரை ஆர்ப்பாட்டங்கள் நடத்த தடை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற தேர்தல் வன்முறைகளைத் தடுக்க பொலிஸாருக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கிகளை பயன்படுத்த பொலிஸ் அனுமதியை பெற்றிருக்க வேண்டும்.

வாக்குகளைப் பெறுவதற்கு இலஞ்சம் மற்றும் தேவையற்ற செல்வாக்குகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்

அரச நிறுவனங்களையும், அரச அதிகாரிகளையும் தவறாக பயன்படுத்தக் கூடாது. அதேபோன்று வேட்பாளர்களுக்கு சமமான ஊடக பிரபல்யங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், குறிப்பிட்ட ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளித்து செயற்படக் கூடாது.

சமூக வலையதளங்கள் இம்முறை தீவிரமாக கண்காணிக்கப்படும். சமூக வலைதளங்களில் பொய் பிரசாரம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

## புலிகள்...

டிருப்பதாக கனடா கூறுகிறது.

விடுதலைப் புலிகள் சார்பாக நிதி திரட்டுவதன் மூலம் உலகத் தமிழர் பேரவை தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக கனடா குறிப்பிடுகிறது.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி குற்றவியல் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளை தீவிரவாத அமைப்பாக கனடா அரசாங்கம் முதன் முதலில் பட்டியலிட்டது.

மேலும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான மதிப்பாய்வு செயல்முறை கடந்த ஜூன் மாதம் நிறைவடைந்தது. இதில் தடையை நீடிக்க மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை வரவேற்பதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியாவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# 24 மணிநேரத்தில் 754 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 754 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 743 ஆண்களும் 11 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 20 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 03 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 177 கிராம் 48 மில்லிகிராம் ஹெரோயின், 765 கிராம் 035 மில்லி கிராம் ஐஸ் , 1,040 கிராம் 154 மில்லி கிராம் கஞ்சா, 220 போதை மாத்திரைகள் மற்றும் 16,706 கஞ்சா செடிகள் ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 17.08.2024),
(AA 2, AA 3 - 24.08.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (17.08.2024)
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (14.09.2024)
Certificate Course in English
Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917
(C-993)



பணிப்பெண் தேவை
யாழ். நல்லூரில் வசித்து வரும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 379 6961
077 221 2142
(1712)



Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0992)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



இந்தியன் விசா சேவைகள்
யாழ்ப்பாணம் - சென்னை
விமானப் பயணச் சீட்டுக்கள்
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(253)



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0992)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



16.08.2024 இன்று பொன்விழாக் காணும்
பொலிகண்டி மண் பெற்றெடுத்த தவப் புதல்வன்
திருவாளர் பண்டிதர் பொன். சுகந்தன்
அவர்கள் மக்களின் மனம் கவர்ந்த பேச்சாளராக திகழ்ந்து மேலும் எழுத்தாளராக, கவிஞராக, ஓவியராக, நாடகாசிரியராக, நடிகராக மற்றும் பாடலாசிரியராக பல்வேறு தளங்களில் தடம் பதித்துள்ளார்.
அவர்கள் இன்னும் பல சிறப்புப் பட்டங்களைப் பெற்று தரணியில் பல்லாண்டு காலம் வாழ பொலிகண்டி கந்தவனப்பதி முருகப் பெருமானையும் பொலிகண்டி மருதாப்புலம் பத்திரகாளி அம்பாள் திருவருளையும் வேண்டி நிற்கும்
சிவப்பிரம்மஸ்ரீ குமர குருமணி
ச.வைத்தியநாதக்குருக்கள் J.P குடும்பம்
(பிரதம குரு பொலிகண்டி கந்தவனம் தேவஸ்தானம், மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்)
கந்தவனக் கோவிலடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
(1715)



NILAVARAI RENTAL HOUSE



5 Bedroom House With 2 WesternStyle Toilets and Separate Bathroom With Electric Showers. 2 Outside Showers as well. 1km from Nilvarai Tourist Site Wells. House with Big Driveways and a Massive Garden. A/C in one of the rooms. Washing Machine and Fans in every room. TV Facilities in the living room. 24/7 Security CCTV footage available. You can cook and have a nice stay during your holidays. Strictly No BACHELORS! Only Family! Week and month rental available
PLEASE CONTACT;
+94 76 492 6949,
+44 7946706694,
+94 77 893 7193
MANY THANKS
(252)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.